வாக்கு மூலம்

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

வழக்கு எண்.90 / 2021

சாட்சிகள் : PW.4

solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Prandaman | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on 21th day September 2024.

(எதிரி ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது Quarters No.75, M8 Block, Sathyamoorthy Nagar, Avadi ல் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு காவல் துறையில், மத்திய குற்றப்பிரிவு ஆவடியில், தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.11.2019 அன்று இரவு 1 மணி அளவில் எனது மேல்வீட்டில் குடியிருக்கும் ராஜ்குமார் என் வீட்டு கதவை தட்டி வெங்கடேஷ் தீ காயங்கலோடு இருக்கிறார் வந்து பாருங்கள் என்று சொன்னார். நான் மேலே போய் பார்த்தேன். தீ காயங்கலோடு இருந்தார். எரியிது எரியிது என்னை காப்பாற்றுங்கள் என்று சொன்னார். அதன் பிறகு எனது தம்பி வடிவேலுக்கு போன் செய்தேன் அவரும் வந்தார். வந்த பிறகு வெங்கடேசனை பார்த்துவிட்டு வடிவேலு Ambulance க்கு போன் செய்தார். Ambulance வரவில்லை ஆட்டோவை வர வைத்து ஏற்றிவிட்டோம். ஸ்டட் போர்டு மருத்துவமனைக்கு ஆட்டோவில் ஏற்றி அனுப்பிவிட்டேன். அங்கு முடியாது என்று கே.எம்.சி மருத்துவமனைக்கு அழைத்து போவதாக சொன்னார்கள். இது

சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

சம்பவம் நடந்தது இரவு 1 மணி போலிசார் 1.30 மணிக்கு வந்துவிட்டார்கள். போலிசார் என்னை 1.30 மணிக்கு விசாரணை செய்துவிட்டார்கள். நான் அந்த Quarters ல் 4 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் 2 வது மாடியில் குடியிருந்தேன். ராஜ்குமார் என்னுடைய நண்பர் இல்லை. மேலே குடியிருப்பது தெரியும். அன்றைய தினம் நான் Quarters லேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல அன்றைய தினம் வெங்கடேசனை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

வாக்கு மூலம்

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

வழக்கு எண்.90 / 2021

சாட்சிகள் : PW.5

solemnly by S.Ramanujam, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வடிவேல் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on 21th day September 2024.

(எதிரி ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது திருப்பத்தூர் அம்மனாங்கோவில் கிராமம், புதுபேட்டை அஞ்சலில் குடியிருந்து வருகிறேன். திருப்பத்தூர் போக்குவரத்து காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 24.11.2019 அன்று இரவு 1 மணிக்கு நான் 54/1 Quarters ல் இருந்தேன். இரவு 1 மணிக்கு என்னுடைய அண்ணன் பரந்தாமன் எனக்கு போன் செய்தார். எனக்கு போன் செய்து தனது மேல் மாடியில் ஒருவர் எரியிது எரியிது என்று கத்திக்கொண்டிருக்கிறார் உடனே வா என்று என்னை அழைத்தார். நான் உடனே Quarters incharge லைன் ஆர்டலியை அழைத்து கொண்டு 4 வது மாடிக்கு சென்றேன். மேலே பார்த்தேன் வெங்கடேஷ் குழாய்க்கு கீழே தண்ணீரை திறந்து விட்டு அமர்ந்திருந்தார் என்ன ஆச்சி–னு கேட்டேன் அவர் ஏதுவும் சொல்லவில்லை. அதன் பிறகு டூட்டி இன்சார்ஜ் தேன் தமிழ்செல்வன்

பெண் சார்பு ஆய்வாளர் நாகலட்சுமி ஆகியோர்கள் அங்கு வந்து 108 ஆம்புலன்சுக்கு போன் செய்தார்கள் ஆம்புலன்சு வர லேட் ஆச்சு அதனால் டுட்டி இன்சார்ஜ் தேன் தமிழ்செல்வன், பெண் சார்பு ஆய்வாளர் நாகலட்சுமி ஆகியோர்கள் வெங்கடேசனை ஸ்டட் போர்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்துக் கொண்டார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்த போது எனது சொந்த ஊர் திருப்பத்தூர் முகவரியில் குடியிருந்ததாக சொன்னேன். நான் சொல்லியிருக்கின்ற 54/1 Quarters ராஜ்குமாரின் பக்கத்து Quarters என்று சொன்னால் சரியல்ல. நான் போன் செய்து அரை மணி நேரம் கழித்து போலிசார் சம்பவ இடம் வந்தார்கள். போலிசார் வந்த பிறகு வெங்கடேசனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்களா அல்லது அதற்கு முன்னரே மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டாரா என்றால் நான் மேலே இருந்தேன் எனக்கு அது தெரியாது. சாட்சி பரந்தாமன் என் உடன் பிறந்தவர் அல்ல எனக்கு உறவு முறையில் அண்ணன் முறை. போலிசார் வந்த போது என்னை அன்றைய தினம் 1.30 மணிக்கு விசாரணை செய்தார்கள். நான் சொல்வது போல சொன்ன தேதியில் அந்த Quarters க்கு செல்ல வில்லை என்றாலும் எந்த சம்பவத்தையும் பார்க்க வில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**